சிவமயம்.

திருவண்ணுமலை

ஸ்ரீ அருணுசல ஈஸ்பரர்

அஷ்டபந்தன

மகாகும்பாபிஷேகபத்திரிகை.

சென்னை-இட்டா

பார்த்தசாரதிநாயுடு

அவர்களது

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சியந்திரசாலையிற்


பதிப்பிக்கப்பட்டது.

1905



விநாயகர்.

ஸ்ரீ அருணாசல ஈஸ்பரகிரி.





ஸ்ரீ உண்ணாமுலையப்பா.



உ

சிவமயம்.

திருவண்ணுமலையார் துணை.

திருவண்ணுமலை அஷ்டபந்தன
மஹாகும்பாபிஷேக பத்திரிகை.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் தேவாரம்.

பண் நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

உண்ணுமுலை யுமையாளொடு முடனுகிய வொருவன்
பெண்ணுகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணுர்ந்தன வருவித்திரண் மழலைம்முழ வதிரு
மண்ணுமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே. (க)

பண் தக்கேசி.

பூவார்மலர்கொண் டடியார்தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார்புரங்க ளெரித்தவன்று மூவர்க்கருள் செய்தார்
தூமாமழை நின்றதிர வெருவித்தொறு வின்னிரையோடு
மாமாம்பிணை வந்தணையுஞ் சாரலண்ணா மலையாரே. (௨)

திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்.

நே ரி சை.

ஓதிமா மலர்கடூவி யுமையவள் பங்காமிக்க
சோதியே துளங்குமெண்டோட் சுடர்மழுப் படையினானே
யாதியே யமரர்கோவே யணியணா மலையுளானே
நீதியா னின்னையல்லா னினையுமா நினைவிலேனே. (௩)

ஸ்தலமகிமை.

இரவிகள்சந்திரர் வயிரவர்விஞ்சைய ரிமையவ ரெண்டிசையோ
ருரகரருந்தவர் முனிவரர்பங்கய ருவணநெடுங் கொடியோர்
பரவிநெருங்கலி னுலகநிறைந்தவர் பணியுமிடங் கிடையா
தரகமவென்பது கடலின்முழங்கிய தருணைவளம் பதியே. (௪)

அண்ணாமலையார் துதி.

ஒருமானைக் கரத்தினில்வைத் தொருமானைச் சிரத்தினில்வை
த்துலகமேழுந், தருமானை யிடத்தினில்வைத் தருள்வானைப் பவள
நெடுஞ்சயிலம்போல, வருமானை முகத்தானை யளித்தானைப் பெரு
மானைமகிழவேறும், பெருமானை யருணகிரிப் பெம்மானையடிபணி
த்து பிறவிதீர்ப்பாம். (௫)

உண்ணாமுலையம்மையார் துதி.

காரொழுகுங் குழலாளைக் கருணைவழிந்தொழுகுமிரு கடைக்
கண்ணாளை, மூரலிளநிலவொழுகப் புழுகொழுக வழகொழுகு முக

த்தினுளே, வாரொழுகுந் தனத்தாளே வடிவொழுகித்தெரியாத மருங்குலாளைச், சீரொழுகும் பதத்தாளே யருணையுண்ணுமுலையாளைச் சிந்தைசேர்ப்பாம். (சு)

கிர்த்திகாதீபமகிமை.

கார்த்திகைக்குக் கார்த்திகைநாளொருசோதி மலைநுனியிற் காட்டாநிற்போம், வாய்த்தவந்தச் சுடர்காணிற் பசிபிணியில்லாதுலகில் மன்னிவாழ்வார், பார்த்திவர்க்கு மிருந்தவர்க்கு மிடையூறு தவறுமிது பணிந்தோர்கண்டோர், கோத்திரத்தி லிருபத்தோர் தலைமுறைக்கு முத்திவரங் கொடுப்போமென்றார். (எ)

அன்னதான மகிமை.

உத்தம தலத்திற் கோடி யருந்தவர்க் குதவுமன்ன
நித்தமாங் காசிமீதோ ரவிழ்ப்பலன் றனக்குநேரா
தத்தலத் தனந்தகோடி யருந்தவர்க் குதவுமன்னஞ்
சத்திய மருணைநாட்டி லவிழ்ப்பலன் றனக்கொவ்வாதே. (அ)

ஸ்ரீமதகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்த ஸ்வரூப சுத்தசாட்குண்ய பரிபூரண பரமபதியாகிய சிவபெருமான் தமது தர்மபத்தினியாரும் லோகமாதாவுமாகிய பராசத்தியாரோ டியைந்து ஸ்ரீசாம்பமூர்த்தியாய் ஆன்மகோடிகள் அதிரிசியராகிய தம்மைத் திரிசியராகக்கண்டு எளிதிலுபாசித்துப் போகமோக்ஷ வின்பங்களைப்பெற் றுய்யவேண்டிப் பூலோகத்தில் எண்ணில்லாத புண்ணியஸ்தலங்களை வைத்துப் பரிவார தேவதைகள் சூழ ஸ்கந்தகணேசர்கள் சகிதம் அப்பராசத்தியாரோடு கோயில்கொண்டு கொலுவீற்றிருந்தருளுவர்.

அவ்வெண்ணில்லாத புண்ணியஸ்தலங்களுள்ளே சிறப்புவகையால் நோக்குமிடத்து உத்தம ஸ்தலங்கள் அறுபத்தெட்டு அவற்றுள்ளும் சிறப்புவகையால் நோக்குமிடத்து உத்தமோத்தம ஸ்தலங்

கள் நாலு. அவை திருவாரூர், சிதம்பரம், காசி, திருவண்ணுமலை என்பனவாம். இவற்றுள்ளும் சிறப்புவகையால் நோக்குமிடத்து முந்திய மூன்றும் முயன்று முத்திபெறவேண்டிய ஸ்தலங்களாய் நிற்ப எங்கிருந்தும் எப்படியிருந்தும் எவர்களும் எம்முயற்சியும் செய்யவேண்டாது தன்னை நினைத்தமாத்திரத்திற்றனே அங்ஙினைத்தவர்களுக்கு முத்தியளிப்பது திருவண்ணுமலையாதலால் எத்தலங்களுள்ளும் அத்தியந்த உத்தமோத்தம சிவஸ்தலம் திருவண்ணுமலையென்பது சர்வலோக சர்வசாஸ்திரப் பிரசித்தமாம்.

சிவபெருமான் பிரமவிஷ்ணுக்கள் அகங்காரத்தால் அடிமுடி தேடியுங் காணுது திகைத்து நிற்பத்தாம், அகண்டவிலாச அதீத சோதிப்பிழம்பாய் நின்று தமது சர்வோத்கர்ஷத்தை அநுபவத்தில் விளக்கி நின்ற துர்லப அவசரம் இத்திருவண்ணுமலையாம்.

சிவபெருமான் தம்மை மறந்து அகங்கரித்த பிரமவிஷ்ணுக்களது அபராதத்தை க்ஷமித்து அவர்களுக்குத் தமது யதார்த்த சுவரூப சுத்தசோதி தரிசனங்காட்டித் தமது சர்வாநுக்கிரககரத்துவத்தை அநுபவத்தில் விளக்கி நின்ற சுலப அவசரம் இத்திருவண்ணுமலையாம்.

சிவபெருமான் மற்றைத் தலங்களிற்போலாது எவர் கண்ணுக்கும் எளிதிற் புலப்படும்படி தமது வடிவம் மலையேயாகக்கொண்டு அதிப்பிரசித்த சாந்நித்தியம் பெற்று விளங்கும் கிருபாவசரம் இத் திருவண்ணுமலையாம்.

சிவபெருமான் சாதி, பிறப்பு, சமயம், ஆசாரம், ஞானம் என்னும் இவற்றுலுயர்ந்தோரும் தாழ்ந்தோருமாகிய சீவர்களெல்லாம் தம்மைத் தடையின்றித் தூரத்திலும் சமீபத்திலும் ஏகாகாரமாகத் தரிசிக்கும்படி தமது ஸ்தானம் வெளியாகக்கொண்டு விளங்கும் சர்வசமரசாவசரம் இத் திருவண்ணுமலையாம்

இங்கே பர்வதமே லிங்காகாரம். சிவலிங்கமாகிய இப்பர்வதமே கிரேதயுகத்தில் அக்கினிமலையாயும் திரேதயுகத்தில் மாணிக்கமலையாயும், துவாபரயுகத்தில் பொன்மலையாயும், கலியுகத்தில் கன்மலையாயும். திருவுருக்காட்டிநிற்கும். இதற்குத் தேசோநகரம் கௌரிநகரம், சிவலோகம், வாயுநகரம், முத்திநகரம், ஞானநகரம், ஸ்தலேச்சுரம், சுத்தநகரம், தக்ஷிணகைலாசம், சோணசலம் என்பன முதலியவாகப் பல நாமங்களுண்டு. ஸாக்ஷாத் கைலாசம் சிவபெருமானுக்கு ஸ்தானமாத்திரமாய் ஒரு பிரகாரமாய் விளங்கும் சிவபெருமான் அதற்கு ஸ்தானியாகிய அதிபதியாவர். இத்திருவண்ணாமலையோ ஸ்தானமாகிய மலையுந் தானாய் ஸ்தானியாய் அதிபதியாகிய சிவமும் தானாய் இரண்டு பிரகாரமாயும் விளங்கும். இதனால் கைலாயத்தின் நோக்கி அக்கைலாசமும் கொண்டாடும் இத் திருவண்ணாமலையினது அதுலமகிமை வெளிப்படை இத்திருவண்ணாமலை ஊழியினும் அழியாது பாதாளமேழினுங் கீழ் சொற்கழிவு பாத மலராய்ப் போதார் புனைமுடியு மெல்லாப்பொருண் முடிவேயாய் நின்று விளங்கும் சுத்தசிவமேயாம். இங்கே மூன்றுயோசனைதூரம் பார்த்த விடமெல்லாம் சிவலிங்கங்களாய் உண்மையாளர்க்கு நக்ஷத்திரங்கள்போல விளங்கித் தோன்றும்.

இத் திருவண்ணாமலை பிரகாரத்தினின்று நோக்குவார்க்கு ஒவ்வோர் பாகங்களிலே பஞ்சமூர்த்தமாகவும் விநாயக சுப்பிரமணியர் அம்பிகை அண்ணாமலையாரென்னும் நான்கு மூர்த்தமாகவும் திரிமூர்த்தமாகவும் இன்னும் பற்பல அற்புதமாகவுந் தோன்றும்.

இங்கே அம்பிகை, கணேசர், ஸ்கந்தர், வயிரவர், பிரமா, விஷ்ணு, இலக்குமி, சரஸ்வதி, சூரியன், சந்திரன், சத்தகன்னிகைகள், அஷ்டவசுக்கள் முதலியோர் செய்தனவும் முழுகியனவுமாய் அவரவர்பேரால் வழங்கப்பெறுவனவாய் முந்நூற்றறுபது புண்ணிய தீர்த்தங்களுள்ளனவாம் அவற்றுள் திக்குப்பாலகர் எழுவர்பேரால்

அவரவர் திக்கில் எழுதீர்த்தங்களும் ஈசான திக்கில் அஸ்வினிதேவர்களால் அஸ்வினி தீர்த்தமும் இன்னும் கட்கதீர்த்தம், அகஸ்தியதீர்த்தம், வசிட்ட தீர்த்தம், திருநதி, சோணாநதி, புண்ணியநதி, சேயாறு, சக்கரதீர்த்தம், பிரமதீர்த்தம், முதலியனவும் உருத்திரகணிகையர் எழுவர் செய்த பல தடாகங்களும் சேர்ந்து புண்ணியதீர்த்தங்களாம். திருக்கோயிலினுள்ளே சிவகங்கையென்னு முக்கியதீர்த்தம் இருக்கின்றது. இங்கே உண்மை, நோக்குடைய ஞானிகளுக்கு நீர் நிலைகளெல்லாம் சிவதீர்த்தங்களாம்.

கைலையில் சுவாமியைத் திருக்கண்புதைத்த பார்வதிதேவியார் காஞ்சியில் வந்து சிவபூசைசெய்து சிவபெருமானது இடப்பாகம் பெற்றது இத்திருவண்ணாமலையிலாம். இத்திருவண்ணாமலையை நினைத்தும், தரிசித்தும், வலம்வந்தும், முழுகியும், பூசித்தும், வசித்தும், தவமிருந்தும், பணிசெய்தும், பேறுபெற்றோர்கள். பார்வதி, கணேசர், ஸ்கந்தர், விஷ்ணு, பிரமா, இலக்குமி, சரஸ்வதி, இந்திரன், திக்குப்பாலகர், வசுக்கள், இருடிகள், முனிவர்கள், சூரியன், சந்திரன், வச்சிராங்கதபாண்டியன், பிரதத்தன், வல்லாளன், குதிரை, நாவி, விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, புல், பூண்டு, முதலியோர் பலராம். தேவர்களும் பிறப்பதுண்டெனில் அப்பிறவி புல்லாயினும் இத்திருவண்ணாமலைப் பூமியிற்பிறக்க இச்சிப்பார்களெனில் இதன் பெருமை சொல்லவற்றோ! இத்திருவண்ணாமலைக்காற்று வீசும் எத்தனையோ காததூரம்வரையில் அக்காற்றுப் பரிசிக்கப்பெற்றவர்களுக்குச் சிவஞானம் எளிதிற் கைகூடுமென்று பெரியோர்கள் சொல்வார்கள்.

இத் திருவண்ணாமலையை வலம்வருவோர் சகல பாவங்களினின்றும் நீங்கி மனோரத சித்திகளெல்லாம் பெற்று முடிவில் முத்தியின்பம் பெறுவார்கள். சரியாவான்கள் சகளசோதி லிங்கமாகக்

கண்டும், கிரியாவான்கள் சகள நிஷ்கள சோதிலிங்கமாகக்கண்டும், யோகிகள் நிஷ்கள சோதிலிங்கமாகக்கண்டு யோகசமாதியிற் றூங்காமற் றூங்கிக்கொண்டும். ஞானிகள் அகண்ட விலாச சுத்தசத்திய ஞானாநந்த சோதிலிங்கமாகக் கண்டு ஞானசமாதியிற் றூங்காமற் றூங்கிக்கொண்டும், திருவண்ணுமலை என்னும் இந்த ஞாநகிரியைப் பிரதக்ஷிணஞ் செய்வர்கள். ஏனையலோகர்களும் தத்தமக்குரியவாறுகண்டு பிரதக்ஷிணம் செய்வர்கள் இங்கே திருமலையை அறியாதே வலம்வந்த விசேடத்தால் நாவியுங்குதிரையும் காந்திசாலி கலாதரன் என்னும் வித்தியாதரராணுர்கள். அறிந்துவலம் வந்து ஒப்பிலாநாயகியாராகிய அம்மையாரும் இடப்பாகம்பெற்றருளினர்.

இங்கே கார்த்திகைமாதத்திற் கார்த்திகைதோறும் அண்ணுமலையார் மலைமேல் விளக்காய்ச் சோதிதரிசனம் காட்டியருளும் அகண்டதீப மஹோத்ஸவம் நிகழும். இவ்வகண்டதீப மஹோத்ஸவ தரிசனத்தால் வருஷமுழுவதும் சோதிதரிசனம்செய்தபலன்கிடைக்குமென்று பிரம விஷ்ணுக்களுக்கு ஆதியில் அண்ணுமலையார் ஆஞ்ஞை, தீபதரிசனஞ்செய்தவர்கள் அஞ்ஞானவிருள் விலகி ஞாநவொளிபெற்று இஷ்டசித்திக ளெல்லாம் பெறுவார்கள். ஆகாசவாசிகளாகிய சுரர்களும் நரர்களாய் வந்து பக்தர்களோடு நெருங்கிநின்று தீபதரிசனம் செய்வர்கள். வேதங்கள் துதித்த அநுமமகாபரஞ்சோதியே நமது திருவண்ணுமலை அகண்ட தீபமாம்.

இத் திருவண்ணுமலையின் மகிமை வாக்குமனங்களைக் கடந்து அனந்தானந்தமாம். சகல வேதவேதாந்த சித்தாந்தப்பிரதி பாத்தியாதுமக சுத்தகைவல்விய பரிபூரண ஞாநனந்தசோதி பர்வதம் நமது திருவண்ணுமலையெனின், இதன் மகிமை சொல்லவல்லார் அறியவல்லார் யார்தாம் இவ்வுலகத்து.

இத்துணைமகிமையுட் கொண்டன்றே நமது பரமாசாரிய குலதெய்வமாகிய ஸ்ரீஞான சம்பந்த வள்ளலார் தமது அருந்தமிழ் வேதத்திற் பொருந்தும் மருந்தனைய ஒவ்வொரு திவ்விய மந்திரத்தாலும் அம்மந்திரத்துட் பொருளாகக்கொண்டு நமது திருவண்ணாமலையென்னும் ஞாநபர்வத சோதிலிங்கத்தைத் துதிரூபத்தில் வைத்து உபதேசித்தருளிய தென்க.

இத் திருவண்ணாமலை ஆலயம் புதுக்கியும் சேர்த்தும் செய்யற்பாலனவாகிய நானாவித ஜீர்ணோத்தாரண சிவகைங்கரிய மஹாசாரியமென்னும் திருப்பணி, திருவருளால் ஒருவாறு செய்யப்பெற்று நிறைவேறியிருத்தலால் எத்துணையும் மகிமைவாய்ந்த மஹோநந்த மஹோல்லாச விலாச மகாப்பிரசித்த மஹாமனோகர மஹாலக்ஷ்மீகர மஹைசுவர்ய மஹாசோதிர்மய மஹாப்பர்வத தக்ஷிணகைலாச மென்னும் நமது திருவண்ணாமலையில் ஸ்ரீமது விசுவாவசு௵ வைகாசி௴ ௨௰௨ சுக்கிலபக்ஷம் தசமிதிதி அஸ்த நக்ஷத்திரம் கூடிய சோமவார சுபதினத்தில் உதயாதி நாழிகை ௰௧வ-க்குமேல் ௰௫நாழிகைவரை விம்மலக்கினத்தில் திருவண்ணாமலையார் உண்ணாமுலையம்மையார் இருவருக்கும் ஸ்கந்தகணேசர்களுக்கும் பரிவார தேவதைகளுக்கும் மஹாசாந்திரூப **மஹா கும்பாபிஷேகமும்** அன்றிரவு பஞ்சமூர்த்திகளும் திருவீதியில் திருவுலாக் கொண்டருளும் மஹாமங்கள மகாவைபவ மகாரிஷபப்பவனி மஹோத்ஸவமும் நிகழுமாதலால் வைதிக சைவர்களாகிய சகல வர்ணாச்சிரம சிவநேசச் செல்வர்களெல்லாம் வந்து தரிசித்து அபீதகுசாம்பா சமேத ஸ்ரீமத் அருணாசலேசுவரரது அற்புததிவ்வியப் பிரசாதம் எய்தி இகபர மோக்ஷலாபம்பெற்றின்புற்றினிது வாழும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

மாவளஞ்சேர்கலியையாயிரத்தேழில் விச்சுவாவசுவைகாசி
தூவளஞ்சேர்தேதிமுப்பான்பூர்வபக்கந்தசமியத்தஞ்சோமவாரம்
பாவளஞ்சேர்சிங்கலக்கினமுண்ணாமலையண்ணாமலையார்பாண்டிக்
கோவளஞ்சேர்நகரத்தார்மகாகும்பாபிடேகநனிகொண்டநாளே.

அண்ணாமலையார் துணை.

விசுவாவசு ௵ வைகாசி ௴ யருஉ ஆதிவாரம் உதயாதிநாழிகை உவளு-க்கு ரிஷபலக்கினத்தில் அனுக்கை ஆரம்பம்.

உசவ மங்களவாரம் உதயாதி நாழிகை ருஙரு ஐ-க்கு தனுலக்கினத்தில் கடஸ்தாபனம்.

ருயவ சோமவாரம் உதையாதி நாழிகை யகவ-க்கு மேல் சிம்மலக்கினத்தில் மகாகும்பாபிஷேகம்.

இங்ஙனம்,

நாட்டுக்கோட்டைநகரத்தார்.

